# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS.No.**165/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு. முத்துமுருகன் | ஊர் | : | கீராத்துர் |
| த.பெ. | : | திரு.தங்கவேல் | மாவட்டம் | : | புதுக்கோட்டை |
| வயது | : | 59 | தொழில் | : | உணவக காசாளர் |

2026ம் ஆண்டு மார்ச் மாதம்9-ஆம் நாள் **பி.சா. 4 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

நான் அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்ன. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் வா.சா.ஆ.3 ஆவணத்திலுள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது, 2வது கையெழுத்து ஹரிஷ் என்பவருடையது.மேற்படி கையெழுத்தை 8.2.2019 அன்று பத்திரம் பதிவு அலுவலகம் சிவகங்கை பூங்காவில் வைத்து கையெழுத்துபோட்டேன். திருமேனி என்பவர் அவருடைய பேரனுக்கு உயில் எழுதிகொடுத்தார். அதில் வேறு யாரும் கையெழுத்து போடவில்லை. திருமேனி முதலில் கையெழுத்து போட்டார். என்னுடைய கையெழுத்து **பி.சா.ஆ.** 4 ஆகும்.

<u>2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

கையெழுத்து போட என்னை திருமேனி அழைத்தாரா என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் திருமேனி கையெழுத்துபோட்ட பிறகு நான் போட்டேன் என்றால் ஆமாம். எனக்கு பிறகு ஹரிஷ் போட்டார் என்றால் ஆமாம். அந்த கையெழுத்துகள் பதிவாளர் முன்பு போடபட்டது என்றால் ஆமாம்.

1ஆம் பிரதிவாதி தரப்பில் மேற்கண்ட குறுக்குவிசாரணை ஏற்றுகொள்ளபட்டது.

<u>வாதிதரப்பில் குறுக்குவிசாரணை</u>

கீராத்துர் எங்குள்ளது என்றால் புதுகோட்டை மாவட்டத்தில் தஞ்சாவூரிலிருந்து 25 கி.மீ துாரத்தில் உள்ளது. நான் வேலை பார்த்த ஹோட்டல் பெயர் என்ன என்றால்

ஹோட்டல் சோழா மேலவஸ்தாசாவடி தற்போதுஇல்லை . அங்கு எத்தனை வருடம் வேலை பார்த்தேன் என்றால் 3 வருடங்கள். அப்போது எங்கு குடியிருந்தேன் என்றால் தஞ்சாவூரில் பிள்ளைகளை படிக்கவைப்பதற்காக குடியிருந்தேன். எந்த விலாசத்தில் குடியிருந்தேன் என்றால் இபி காலனியில் குடியிருந்தேன். திருமேனியை எனக்கு எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் எங்கள் ஹோ ட்டலில் டீகுடிக்கவந்த வகையில் இரண்டரை ஆண்டுகளாக தெரியும். அவர் வீடு எங்கு உள்ளது என்றால் தெரியாது. திருமேனி மட்டும்தான் தெரியுமா என்றால் ஆமாம் அவரை தவிர குடும்பத்தில் யாரையும் தெரியாது. உயிலில் கையெழுத்து போட்டதுபோல் எத்தனை பத்திரங்களில் போட்டுள்ளேன் என்றால் தஞ்சாவூரில் இதுஒன்றுதான் கரம்பகுடியில் 3, 4 போட்டுள்ளேன். சாட்சி கையெழுத்து தெரிந்துதான் போட்டேனா என்றால் ஆமாம். உயில் பற்றி எனக்கு தெரியுமா என்றால் பேரனுக்கு அவர் சொத்தை யாருக்கும் தெரியாமல் எழுதிகொடுத்தார். திருமேனியை அதற்கு முன்பு எவ்வளவு முறை பார்த்துள்ளேன் என்றால் 10, 20 முறை பார்த்துள்ளேன். எப்படி வருவார் என்றால் TVS excel வண்டியில் வருவார். அவர் பெயரில் ஒரு நகர் உள்ளது என்றால் சொல்லியுள்ளார். திருமேனி நகர் நாகபட்டினம் ரோட்டில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. அவர் யார் என்றால் Retired Police Officer. போலிஸில் என்ன வேலை பார்த்தார் என்று கேட்டேனா என்றால் கேட்கவில்லை. என்னிடம் பழகும்போது வயது என்ன என்றால் ஒய்வு பெற்று 10ஆண்டுகள் என்று சொன்னார். திருமேனி கையெழுத்து போடுவதற்கு முன்பாக எத்தனை நாளில் கூப்பிட்டார் என்றால் அன்றைக்குதான் கூப்பிட்டார். கையொடு அழைத்துபோனாரா என்றால் வரச்சொல்லிவிட்டு போனார். நான் 1ஆம் பிரதிவாதியுடன் வந்தேனா என்றால் அவரை எனக்கு தெரியாது தற்போதுதான் தெரியும். என்னை 1ஆம் பிரதிவாதி அழைத்து வந்தாரா என்றால் இல்லை சம்மன் வந்தது வந்தேன். அந்த ஆவணத்தை தயார் செய்த எழுதியவர் யார் என்றால் தெரியாது. அந்த ஆவணம் கையால் எழுதபட்டதா கணினியில் தட்டச்சு செய்யபட்டதா என்றால் ஞாபகமில்லை. கையெழுத்து போடும்போது சாயங்காலம் இருக்குமா என்றால் மதியம் 12மணி. திருமேனியுடன் யார் யார் வந்தார் என்றால் யாருமில்லை. அவர் பேரன் வந்திருந்தாரா என்றால் வரவில்லை. நான் போகும்போது எல்லாம் தயாராக இருந்தது நான்போய் கையெழுத்துபோட்டுவிட்டு வந்தேன் என்றால் ஆமாம். எனக்கு பிறகு

ஹரிஷ் போட்டாரா என்றால் ஆமாம். ஹரிஷ் என்ன ஊர் என்றால் தஞ்சாவூர் என்று சொன்னார்கள் விலாசம் தெரியாது. நான் சொல்வதுபோல் பதிவு அலுவலகத்தில் தயார் செய்யவில்லை என்றும் வேறு அலுவலகத்தில் தயார் செய்பட்டது என்றும் அவருக்காக கையெழுத்துபோட்டுவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்ச ரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.09 18:54:02 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.